**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.198/2022 P.W.2**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | கோவிந்தம்மாள் |
| க/பெ. | மணி |
| வயது | 65 |
| வசிப்பிடம் | எண்.2/46, செல்லியம்மன் கோவில் தெரு, செரப்பணஞ்சேரி, உமையாள் பரணிச்சேரி |
| தொழில் | வீட்டு நிர்வாகம் |
| **முதல் விசாரணை** | **21.01.2026** |

நான் இந்த வழக்கில் மூன்றாம் தரப்பினர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது ஆதார் அட்டை ஒளி நகல் ம.சா.ஆ.14.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. இந்த விபத்து எப்பொழுது நடந்தது என்றால் மாலை 3.30 மணியளவில் நடந்தது, தேதி நினைவில்லை. நெம்மேலியில் உள்ள என் மகள் சாந்தியின் வீட்டிற்கு வந்து திரும்ப எனது வீடு உள்ள செரப்பணஞ்சேரி கிராமத்திற்கு செல்ல் நெம்மேலி பேருந்து நிறுத்ததில் நின்றுக்கொண்டிருந்த போது விபத்தில் மரணமடைந்த தமிழரசி என்பவரும், காயமடைந்த அவரது தாயா ் திருமதி.தவசெல்வியும் அவ்விடத்தில் இருந்தபோது ஒரு கார் வந்து அவர்கள் மீது மோதியது. விபத்தை நான் நேரில் பார்த்தேன். விபத்தில் உடனடியாக யாரும் மரணமடையவில்லை. இரண்டு மாதங்கள் கழித்து மருத்துவமனையில் தமிழரசி இறந்து விட்டதாக தெரியவந்தது. விபத்து நடந்த இடத்தில் போலீசார் வந்த போது நான் அந்த இடத்தில் இல்லை. விபத்து குறித்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை. மனுதாரர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு நஷ்டஈடு கிடைக்க வேண்டுமென்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை